**Starting time  11.53 P.M.**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 254/2015**

Deposition of **P.W.2** witnesses for Plaintiff / Defendant Solemnly affirmed by Tmt. A. Tamilselvi, Gr. III Bench Clerk of this court, on 09.01.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : செல்வம் | Father's Name | : |
| Village | : | Taluk | : |
| Caste | : | Religion | : |
| Calling | : | Age | : |

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை : வழக்கு தாக்கல் செய்துள்ள வாதிக்கு நான் தம்பி என்றால், சரியல்ல, அவர் என்னுடைய அக்காவை திருமணம் செய்துள்ளார், நான் அவருக்கு மைத்துனர். நான் வளையாமதேவி கிராமத்தில் குடியிருக்கிறேன் என்றால், ஆமாம். வழக்கு சொத்து ஆரியபாளையம் கிராமத்தில் இருக்கிறது என்றால், ஆமாம். இரண்டு இடத்திற்கும் இடையே 25 கி.மீ. தொலைவு இருக்குமென்றால், ஆமாம். எனக்கு ஆரியபாளையத்தில் சொத்து இல்லை என்றால், ஆமாம். நான் பிறந்ததில் இருந்தே வளையமாதேவியில் குடியிருந்து வருகிறேன் என்றால், ஆமாம். எனக்கு வயது என்னவென்றால், 48 வயது. என் அக்காவிற்கு எப்போது திருமணம் ஆனது என்றால், எனக்கு 4 வயதாக இருக்கும்போதே திருமணமாகிவிட்டது.

2. தாவா சொத்து சம்மந்தப்பட்ட ஆவணங்களை நான் பார்த்துள்ளேனா என்றால், பார்த்துள்ளேன். வாதி பெயருக்கு தாவா சொத்து வந்து எத்தனை வருடங்கள் ஆகிறது என்றால், தெரியாது. வாதி பெயருக்கு எவ்வாறு இச்சொத்து பாத்தியப்பட்டது என்றால், பணம் கொடுத்து வாங்கினார். யாரிடம் இருந்து வாங்கினார் என்றால், அதுபற்றி தெரியாது. தாவா

சொத்தை வாதி பணம் கொடுத்து கிரயம் பெற்றதாக நான் கூறுவதே பொய் என்றால், சரியல்ல. வாதிக்கு பட்டா மூலம் பாத்தியப்பட்டது என்றால், அது தவறு. பிரதிவாதியை எனக்கு தெரியுமா என்றால், தெரியும். எப்படி தெரியும் என்றால், எனது அக்காவை கட்டிக் கொடுத்த ஊரில் அவரும் இருக்கிறார். மேலும் அக்கா கணவரின் உறவினர் ஆவார், அதன் மூலம் தெரியும்.

3. வாதி திருச்செங்கோட்டில் இருக்கிறார் என்றால், பிழைக்கப்போனவர் அங்குதான் இருக்கிறார். எத்தனை வருடங்களாக இருக்கிறார் என்றால், 35 வருடங்களாக இருக்கிறார். தாவா சொத்தில் வீடுகட்டி எத்தனை வருடங்களாகிறது என்றால், சுமார் 35 வருடங்கள் இருக்கும். வீடு கட்டியபிறகு வாதி அதில் குடியிருக்கவில்லை என்றால், அவர் தம்பிதான் இருக்கிறார். விசேஷம் என்றால், வாதி வந்து போவார். அவரது தம்பி பெயர் என்னவென்றால், ஆறுமுகம். அவரது தம்பிக்கும் அருகிலேயே தனியாக வீடு இருக்கிறது என்றால், ஆமாம். தாவா வீட்டிற்கு எந்த பக்கத்தில் ஆறுமுகத்தின் வீடு இருக்கிறது என்றால், மேற்கு பக்கத்தில் இருக்கிறது. இரு வீட்டிற்கும் இடையில் சந்து இருக்கிறது என்றால், ஆமாம்.

4. அது பஞ்சாயத்து சந்து என்றால், இல்லை. இருவருக்கும் பாத்தியப்பட்ட சந்து. அது பஞ்சாயத்து பொது சந்து இல்லை என்றாலும், அது இருவருக்கும் பாத்தியப்பட்ட சந்து என்றாலும் சரியல்ல. தாவா குறித்து எனக்கு நேரடியாக எந்த விவரமும் தெரியாது என்றாலும் அக்கா கணவர் என்பதால் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. சிறு வயதிலிருந்தே அக்கா வீட்டிற்கு சென்று வருவதால் விவரங்கள் எனக்கு தெரியும். பிரதிவாதி அவருடைய வீட்டில்தான் சிலாப் போட்டுள்ளார் என்றால், இல்லை. என்னுடைய மாமா வீட்டு கட்டடத்தில் தான் போட்டுள்ளார். பிரதிவாதி இடத்தில் போட்டுள்ள சிலாப்பை எடுக்கவேண்டும் என்றுதான் வழக்கே நடக்கிறது என்றாலும், வழக்கு பற்றிய விவரங்கள் எதுவும் தெரியாமல் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முழுவதும் முடித்துக் கொள்வதாக தெரிவிக்கப்படுகிறது.

Ending Time: 12.04 P.M.

**ஒப்பம்/- என்.திலகேஸ்வரி**

**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆத்தூர்.**